**MCOP NO: 899/2024 DATE: 22.10.2025**

ம.சா :1

பெயர் : திருமதி. தெய்வநாயகி

த/பெ : திரு. ஆறுமுகம்

வயது : 65

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து காண்பித்தார் கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 9 வரை தாக்கல் செய்கிறேன். மசாஆ 4 மற்றும் 5-ஆன ஆவணங்கள் எதிர்மனுதாரரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

திரு. டில்லி கணேசன் என்பவர் எனது பேரன் ஆவார். அவர் இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் துப்புரவு வேலை செய்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மசாஆ 1 மற்றும் மசாஆ 2-ல் எனது வயது 75 என்று காட்டப்பட்டுள்ளது. இந்த விபத்து நான் சாலையில் வரும் வாகனங்களை கவனிக்காமல் திடிரென்று சாலையின் குறுக்கே கடந்ததால் எனக்கு விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் 2 ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு வழங்க கடமைபட்டவர் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. மசாஆ 4 மற்றும் 5-ஆன ஆவணம் அதிக இழப்பீடு கிடைப்பதற்காக மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மசாஆ 6-ஆன ஆவணமானது, எனக்கு ஏற்பட்ட விபத்திற்கு சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகி விட்டதால் எனக்கு வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது முதல் பிரமாண பத்திரிக்கையில் சொல்லப்பட்டுள்ள இயலாமையானது என்னுடைய வயது மூப்பின் காரணமாக ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.